# ஏன்? எதற்காக இந்த மைக்ரோ பிலிம்கள்? (நுண்படச் சுருள்கள்)



எமது முன்னோர்கள் தங்கள் கால வரலாற்றை எழுதிவைக்கத் தவறியதால், அவர்கள் கால அரசியல் கலாச்சார வளர்ச்சியை, பொருளாதாரக் கட்டமைப்பை அறிந்துகொள்ள முடியவில்லை. கடலால் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தின் எச்சமே இலங்கை என்கிறோம். தகுந்த ஆதாரங்களை தேடினோமா? அகதிகளாக வந்த விஜயனும் அவனது கூட்டாளி பரம்பரையினரும் நாடே நமக்குச் சொந்தமென்று கூறி கொக்கரிக்கிறார்கள். இல்லை! இது தவறு! என்று கூற என்ன ஆதாரங்களை வைத்திருக்கிறோம்?

தமிழரின் ஆரம்பகால வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டுமானால் சிங்கள பௌத்த துறவிகள் எழுதிவைத்த மகாவம்சம் போன்ற நூல்களைப் புரட்டிப் பார்ப்பதை விட வேறு வழி எதுவும் எமக்குத் தெரியவில்லை. புத்த பிக்குகளோ பல்லாண்டு காலமாக தமிழர் மீது வெறுப்பை விதைத்து வருபவர்கள். தமிழர் வரலாற்றை இருட்டடிப்புச் செய்தும், தவறுதலான கருத்துக்களை முன்வைத்தும் எழுதியவற்றையெல்லாம் நாம் நம்ப வேண்டுமா?

தமிழர்கள் தம் வரலாற்றைத் தாமே எழுதிப் பதிவு செய்தால் தான் உண்மையான தகவல்களை பெறமுடியும். ஆனால் இப்போது கூட இந்த துறையில் தமிழர்கள் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை எமக்காக எம் எதிரிகள் எழுதும் திரிபுவாதங்களை எப்படி நாம் உண்மையான வரலாறு என எடுத்துக்கொள்ள முடியும்?

நான் உயர்கல்வி கற்கும் போது எமது சரித்திரப் பாட ஆசிரியர் இலங்கைத் தமிழர் வரலாறு முழுமையற்றதாக முரண்டபட்ட நிலையில் காணப்படுவதாயும், பலகால வரலாறு எழுதப்படாத நிலையில் காணப்படுவதாகவும் இன்றைய மாணவர்கள் இத்துறையில் ஈடுபட்டு இன்றைய வரலாற்றையாவது பதிவு செய்வதுடன் பல நூல்களையும் வெளியிட வேண்டுமென்றும் இதை அவர்கள் தேசியக் கடமையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது ஞாபகம் இருக்கிறது.

1956ம் வருடம் இலங்கைத் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கிய ஆண்டாகும். இக் காலகட்டத்தில் இலங்கை பிரதமர்.பண்டாரநாயக்கா சிங்கள மொழியை மட்டும் அரச மொழியாக்கும் தமது திட்டத்தை பிரகடனப்படுத்தி பாராளுமன்றத்திலும் அந்த மசோதாவை 1956 ஜூன் மாதம் 5ம் நாள் கொண்டுவந்தார். இதை நாடெங்கிலும் உள்ள தமிழர்கள் தீவிரமான எதிர்த்து ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அன்றை முக்கிய எதிர்க்கட்சியான தமிழரசுக் கட்சி பாராளுமன்றத்துக்கு முன்னுள்ள காலிமுகத்திடலில் அமைதியான முறையில் மாபெரும் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தியது. சத்தியாக்கிரகிகள் சிங்களக் காடையர்களாலும் அரச ஆதரவாளர்களாலும் தாக்கப்பட்டனர். கற்கள் வீசப்பட்டு பலத்த காயம்களுக்கு உட்படுத்தப்பட்டனர். மக்கள் பிரதிநிதி ஒருவர் உடைகள் கழையப்பட்டு உள்ளாடையுடன் பக்கத்தே உள்ள ஹோட்டலுக்குள் ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. வட்டுக்கோட்டை பிரதிநிதி திரு.அ.அமிர்தலிங்கம் தலையில் பலத்த காயங்களுடனும் பொந்துவில் பிரதிநிதி ஜனாப்.முஸ்தபா பலத்த உடல் காயங்களுக்கும் உட்படுத்தப்பட்டனர். இவ்வளவு நிகழ்வையும் பார்த்துக் கொண்டும் காவல்துறையினர் மௌனமாக இருந்தது ஆச்சரியத்தைத் தந்தது!

மறுநாள் ஜூன் 6ம் திகதி இச்சம்பவங்கள் படங்களுடன் பத்திரிகைகளில் வெளியானபோது எனது பாடசாலை நாட்களில் அந்தச் சரித்திரப் பாட ஆசிரியர் கூறிய கருத்து ஞாபகத்துக்குவரவே அன்றிலிருந்து பத்திரிகைச் செய்திகளை திரட்டத் தொடங்கினேன். இக்காலகட்டத்தில் கண்டியில் ஒரு நிறுவனத்தில் நான் வேலைசெய்து கொண்டிருந்தது எனது இச் சேகரிப்புக்கு வசதியாய் அமைந்தது.



1956க்கு முன்னுள்ள காலப்பகுதி ஏடுகளை சேகரிக்க அங்குள்ள பழைய பேப்பர்கள் விற்கும் நாடார் கடைகளை நாடினேன். கரத்தை வண்டிகளில் பத்திரிகைகள் வந்து குவிந்தன. இவற்றை ஆண்டு வாரியாக பிரித்து தேவையான செய்திகளை அடையாளமிட்டு, திகதி, பத்திரிகையின் பெயர்கள் எழுதப்பட்ட பின், அவற்றைக் கத்தரித்து பாரிய தாள்களில் ஒட்டிப் பதிவு செய்தேன். திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து பாரஊர்திகள் மூலம் பழைய பத்திரிக்கைகளை தருவித்தேன். எனக்கு உதவியாக ஒருசிலரை வேலைக்கு அமர்த்திக் கொண்டேன். எனது திருமணத்திற்கு பின் என் மனைவியும் ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் உதவியதை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

பழைய பத்திரிக்கைகளைச் சேகரித்து வைத்தவர்களும் என் வேலைத்திட்டத்தை அறிந்து தம் சேகரிப்புகளை தந்து உதவினர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களை அணுகி உதவி கேட்ட போது பல்கலைக்கழக நூலகத்தி லிருந்த பழம் பெரும் பத்திரி கைகளைப் பிரதி எடுக்குமாறு தந்துதவினார். அவர் தந்த ஏடுகள் 1889ல் இருந்து தொடர்ச்சியாக இருந்தவை. எனது முயற்சிக்கு உதவிய முதல் பேராசிரியர் வித்தியானந்தன், பின்பு எனது கிராமம் குண்டு வீச்சால் தாக்கப்பட்ட போது பல்கலைக் கழகத்துக்கு அவற்றைத் தருவித்துப் பாதுகாத்து தந்த பெருந்தகையுமாவர். "ஈழகேசரி" என்ற பிரபல வாரஏடு 1930லிருந்து 1957 வரை பிரசுரிக்கப்பட்ட அனைத்து இதழ்கழையும் பிரதி எடுக்க, குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஒத்துழைப்புத் தந்ததை இங்கு நன்றியுடன் குறிப்பிடவேண்டும். எனது இந்த வரலாறு திரட்டும் பணிக்கு கீழ்கண்ட தினசரி, வார ஏடுகளை பயன் படுத்தியுள்ளேன்.



யாழ்ப்பாணம்
பல்கலைக்கழக உபவேந்தர்
**சு.வித்தியானந்தன் அவர்கள்**

மோனிங் ஸ்டார்,

இந்து ஓகன்,

ஈழகேசரி (1930 முதல் 1957 வரை முழுவதும்),

வீரகேசரி,

சுதந்திரன் (1952லிருந்து),

தினகரன்,

டெய்லி நியூஸ்,

சண்,

சற்றடே றிவ்யூ (முழுவதும்),

ரிபியூன் (முழுவதும்),

திசை (முழுவதும்),

ஈழநாடு,

தினமுரசு, (ஆரம்ப இதழிலிருந்து 2002 வரை)

தினபதி,

சண்டே ரைம்ஸ்,

சண்டே ஒப்சேவர்,

தினக்குரல்,

சிந்தாமணி,

ஐலண்ட்,

ஹோட் ஸ்பிறிங்

மற்றும் நினைவில் இல்லாத பல பத்திரிகைகள், 10,000 வரையிலான பல்துறைக் கட்டுரைகள், 10,000 வரையிலான காட்டூன்கள், உலகத்தமிழர் தொடர்பான பல கட்டுரைகள் பத்திரிகைச் சேகரிப்புகளுமென எனது காப்பகத்தில் இடம் பெற்றன. பிரபல எழுத்தானர் கனக.செந்திநாதனால் இலவசமாக தரப்பட்ட இலங்கையில் தோன்றி மறைந்த மறைந்த பத்திரிகைகள் சஞ்சிகைகள், என்னால் திரட்டப்பட்டவை என 1000க்கும் மேற்பட்ட பிரதிகள் இடம்பெற்றிருந்தன.

1963ல் முதல் தடவையாக எனது சேகரிப்பில் ஒரு பகுதி கல்முனையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. அதனைத் திறந்து வைத்து வாழ்த்தியவர் தமிழரசுத் தந்தை எனப் போற்றப்படும் திரு.செல்வநாயகம் அவர்களாகும்.

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது ஏற்படுத்தப்பட்ட கண்காட்சியில் அதனை ஆரம்பித்து வைத்தவர் வண.தனிநாயக அடிகளாராகும். இம் மாநாட்டுக்கு வந்த உள்ளூர், வெளிநாட்டு அறிஞர்களால் எனது சேகரிப்புகள் பெரிதும் பாராட்டப்பட்டன.

1996 ல் கனடாவில் நடைபெற்ற உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டுக்கு அரசியல் சார்பற்ற ஆவண்ங்களை அரச அனுமதியுடன் எடுத்துச்செல்லப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டன.

1997 பிப்ரவரியில் கனடாவிலிருந்து கடல்வழியாக நோர்வே நாட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்ட ஆவணங்கள் நோர்வே ஒஸ்லோ பல்கலைக் கழகத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டபோது நோர்வே நாட்டுப் பேராசிரியர்கள் பலரும் வருகைதந்து வாழ்த்தி மகிழ்ந்தனர்.

இலங்கை ஹட்டனில் நடைபெற்ற மலையகச் சாகித்திய விழாவில் மலையகத்தமிழருக்கெனத் தனிப்பிரிவாக ஆவணக் கண்காட்சி நடைபெற்ற போது இந்திய உதவித் தூதுவர் வந்து வாழ்த்திப் பொன்னாடை போர்த்திப் பரிசில்கள் வழங்கினார். ஆறுமுகம் தொண்டமான் அவர்களும் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பாராட்டினார்.

வரலாறு இன்றேல் தமிழர் வாழ்வே இல்லை. வரலாற்றைத் திரட்டி வையகத்தில் தலைநிமிர்வோம் என்பது எமது தாரகமந்திரமாகும், இலங்கைத் தமிழர் வரலாற்றைத் திரட்டி அவற்றை மைக்ரோ பிலிம்களாக்கிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது எமது பேரவா. நாட்டின் பல பகுதிகளிலும், தமிழாராய்ச்சி மாநாட்டின் போதும், கனடா, நோர்வே நாட்டு அறிஞர்கள் பாராட்டி வழங்கப்பட்ட வாழ்த்துக்களையும், படங்களையும் இணைத்து நோர்வே நாட்டு இலங்கைத் தூதரகத்திற்கு கடிதம் அனுப்பி எனது சேகரிப்புகளை மைக்ரோ பிலிமாக்க உதவுமாறு கேட்டுக்கொண்டபோது நோர்வே தூதரகம் தாம் உதவுவதாக எழுதியது எனது முயற்சிகளுக்கு மகுடம் சூட்டுவது போல் அமைந்தது. இரண்டு ஆண்டுகள் அவர்கள் உதவி கிடைத்ததை இங்கு நன்றியுடன் குறிப்பிட வேண்டும்.

2003ம் ஆண்டு நான் சுவிச்சர்லாந்து சென்றபோது யுனெஸ்கோ அதிகாரிகளைச் சந்தித்து மைக்ரோ பிலிம் ஆக்கப்பட்ட 200 ரீல்களைப் பாதுகாப்புக்கும் மக்கள் ஆய்வுக்குமாக வைக்க முடியுமா? எனக் கேட்டபோது அவற்றை இலவசமாகத் தருவதாயின் தாம் பெற்றுக்கொள்வதாக கூறினார்கள். நான் இலங்கை திரும்பியதும் அவற்றை அனுப்பிவைக்க அவர்கள் அங்குள்ள லுசேன் மாகாண கிளாரூஸ் ஆவணக் காப்பகத்தில் அவற்றைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

என்னால் பதிவுசெய்யப்பட்ட இலங்கைத் தமிழர் வரலாறு 1889ஆம் ஆண்டிலிருந்து ஏப்ரல் 2011 வரை மைக்ரோ பிலிம்களாக திரட்டப்பட்டுள்ளன. ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட இச்சேகரிப்புகள் இக்காலகட்டத்தில் நிகழ்ந்த அனைத்து சம்பவங்களையும் உள்ளடக்கியதாக, காய்தல் உவத்தலின்றி பல பக்க கருத்துகளையும் அரச செய்திகள் உட்பட பிரதி பலிப்பனவாக அமைந்துள்ளன. மைக்ரோ பிலிம் பிரதிகள் ஏறத்தாழ 500 வருடங்கள் வரை வைத்துப் பேண

முடியுமாயினும் புதிய பிரதிகளாக மாற்றவும், ஒன்றிற்கு மேற்பட்ட பிரதிகளை உருவாக்கவும் முடியும்.

தமிழ்நாட்டுக்கு 2008ம் ஆண்டு அகதியாக வந்தபோதும் இலங்கைத் தமிழர் வரலாற்றை ஆவணப்படுத்தி மைக்ரோ பிலிமாக்கும் பணி தொடர்கிறது. ஏறத்தாழ 300 மைக்ரோ பிலிம்களை இதுவரை பதிவுசெய்துள்ளோம். ஒரு குடும்பத்தின் உன்னத நன்கொடையாக, எம் எதிர்கால சந்ததிக்கு இவற்றை விட்டுச்செல்வதில் நானும் என் மனைவியும் மகிழ்ச்சியடைகிறோம். குரும்பசிட்டி கிராமத்தின் எல்லையில் இருக்கும் பலாலி ராணுவ முகாமிலிருந்து நடு இரவுகளில் நடந்த தொடர் குண்டுவீச்சால், விளக்குகளுடன் பனந்தோப்புகளுக்குள் நானும் என் மனைவியும் குழந்தைகளும் ஓடிப் பதுங்கிய காலகட்டத்தில் எமது ஆவண சேகரிப்புகளைப் பல்கலைக்கழக நூலகத்தில் பல பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது 2 வருடங்கள் வரை பாதுகாத்துத் தந்தவர் யாழ்பாணப் பல்கலைக்கழக உபவேந்தராக இருந்த பெருந்தகை பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள், மற்றும் பேராதனை பல்கலைக்கழக சரித்திர பேராசிரியர்.திரு.எஸ்.பத்மநாதன் அவர்கள் எமக்கு முதுகெலும்பாக இருந்து உதவியவர். பின்பு இச்சேகரிப்புகளை அரச கப்பல் மூலம் கொழும்புக்கு இலவசமாக அனுப்பித் தந்தவர் அரச அதிபராக இருந்த திரு.பத்மநாதன் அவர்கள். இவர்கள் உதவிகளை இங்கு பதிவு செய்வதுடன் எமது மனங்கனிந்த நன்றியையும் காணிக்கையாக்குகிறோம்.

நிறைந்த பணச்செலவில் இந்த மைக்ரோ பிலிம்களின் மூலப்பிரதிகளை வெளிநாடு ஒன்றில் பாதுகாப்புக்கருதிப் பேணிப்பாதுகாத்து வருகிறோம். இந்த நூலின் அடுத்த பக்கங்களில் "இலங்கை தேசிய ஆவணக் காப்பகத்தில் தமிழ் ஆவணங்களின் நிலை" என்ற கட்டுரை எமது சேகரிப்பின் பெறுமதியையும் இத்துறையில் தொடர்ந்தும் செயலாற்ற வேண்டியதன் நியாயத்தையும் உணர்த்தப் போதுமானவை எனவும் கருதுகிறோம்.

"வரலாறு இன்றேல் தமிழர் வாழ்வே இல்லை"

என்றும் அன்புடன்

திருச்சி
15.07.2012

**குரும்பசிட்டி இரா.கனகரத்தினம்**
**திருமதி. பவளராணி கனகரத்தினம்**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்" - குறள்